**செய்தி வெளியீடு எண்**: 739 நாள்: **14.11.2007**

# **செய்**தி வெளியீடு

**31–7–2007 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த நிதி ஆண்டு முடிவதற்குள் மூன்று இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டு மென்று ஒரு வரையறை விதித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் அந்தப் பணியில் முழுமூச்சுடன் செயல்பட வேண்டுமென்று முடிவெடுத்து அறிவித்ததைத் தொடர்ந்து, இன்றையதினம் மாலையில் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் அந்த வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த அளவிற்குப் பணியாற்றினார்கள் என்பதை ஆய்வு செய்வதற்கான கூட்டம் நடைபெற்றது.**

**இந்தக் கூட்டத்தில் வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், வளர்ச்சி ஆணையர், வருவாய்த் துறை செயலாளர், நில நிர்வாக ஆணையர் மற்றும் திருச்சி, நாகை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோவை, விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

**3 லட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், 10–11–2007 வரை 2 லட்சத்து 7 ஆயிரத்து 287 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து இந்தப் பணியினை முழு வேகத்தோடு முடிப்பதற்கான அனைத்து முயற்சி களையும் எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அறிவுரை வழங்கினார்.**

**மேலும் இன்றையதினம் நடைபெற்ற கூட்டத்தின் மூலமாக வெளியிடப்படும் புதிய அறிவிப்புகள் வருமாறு : –**

**இலவசமாக வீட்டு மனை பெற கிராமப் புறங்களில் ஆண்டு வருமானம் 30 ஆயிரம் ரூபாய் என்றும், நகர்ப் புறங்களில் ஆண்டு வருமானம் 50 ஆயிரம் ரூபாய் என்றும் இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பை முழுவதுமாக நீக்குவதென்று முடிவு செய்யப்பட்டது. இனி இலவசமாக வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க எந்தவிதமான வருமான உச்ச வரம்பும் கிடையாது.**

**கிராமப்புறங்களில் இதுவரை மூன்று செண்ட் வரையிலும், நகராட்சிப் பகுதிகளில் ஒன்றரை செண்ட் வரையிலும், மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு செண்ட் வரையிலும் வருமான வரம்புக்குட்பட்டு, இலவசமாக வீட்டு மனைப் பட்டாக்கள் வரைமுறை செய்து வழங்கப்பட்டதற்கு மாறாக இனிமேல் கிராமப்புறங்களில் நான்கு செண்ட் வரையிலும், நகராட்சிப் பகுதிகளில் இரண்டரை செண்ட் வரையிலும், மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டு செண்ட் வரையிலும் இலவசமாக வீட்டு மனைப் பட்டாக்கள் வருமான உச்ச வரம்பு எதுவுமின்றி வழங்கிட முதல் அமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே வீட்டு மனைப் பட்டாக்களைப் பெற மனைக்கிரயம் செலுத்தியவர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகை அவர்களுக்கே திரும்ப வழங்கப்படும்.**

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–**9.**